**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.29/2012 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு.கண்ணன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of December 2021.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2011 ஆம் தேதி 18.30 மணிக்கு நான்குநேரிக்கு உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் உத்தரவுபடி விஜயநாராயணம் காவல் ஆய்வாளர் பொறுப்பு நான்குநேரி மேற்பார்வையில் மூலைக்கரைப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் பார்ட்டி சகிதம் மணல் தடுப்பு சம்பந்தமாக கூனிகுளம் குளத்துகரையில் ரோந்து செய்து வரும் போது பின்னால் பெயர், ஊர் கேட்டு தெரிந்த முனைஞ்சிபட்டி சந்தை தெரு, பூல்பாண்டி மகன் மாரிமுத்து மற்றும் பாலகிருஷ்ணன் (சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டினார்) ஆகியோர்கள் TN 72 AV 5481 என்ற டிராக்டர் மற்றும் TN 69 M 0424 என்ற டிரைலர் உடன் கூடிய டிராக்டரை மாரிமுத்து என்பவர் ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் பாலகிருஷ்ணன் என்பவர் டிராக்டரையும் ஓட்டி வந்தனர். மேற்படி வண்டியை மறித்த போது எதிரிகள் இருவரும் கூனிகுளம் குளத்துகரையில் டிராக்டரை விட்டுவிட்டு ஓடிவிட்டனர். பின்னர் மேற்படி டிரைலரில் ரூ.1500 மதிப்புள்ள ஒரு யூனிட் மணலை கைபற்றி நிலையம் கொண்டு வந்து அத்தாட்சியில் மூலைக்கரைப்பட்டி உதவி ஆய்வாளரும், நானும் கையெழுத்து செய்தோம். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக விஜயநாராயணம் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்திற்கு எத்தனை பேர் சென்றீர்கள் என்றால் நானும், உதவி ஆய்வாளரும் சென்றோம். எதில் சென்றிர்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவ இடம்

காவல்நிலையத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 150 மீட்டர் தூரம் இருக்கும். கூனிகுளம் வழியாக வந்தால் காவல்நிலையம் வழியாக தான் செல்லமுடியும் என்றால் சரிதான் ஆற்றுகால்வாய் வழியாகவும் செல்லலாம். எதிரிகள் காவல்நிலையம் வழியாக தான் வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் போது குளத்தில் எவ்வளவு தண்ணீர் இருந்தது என்றால் அரை குளம் தண்ணீர் இருந்தது. எதிரிகள் மணலை எதில் இருந்து அள்ளீனார்கள், எத்தனை பேர் அள்ளீனார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். குளத்தில் எப்போதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் யாரும் இல்லை எப்போதாவது இருப்பார்கள். டிராக்டரில் கலப்பை, மண்வெட்டி ஆகியவை இருந்ததா என்றால் இருந்தது. 1 வது எதிரி டிராக்டரில் எங்கு அமர்ந்திருந்தார் என்றால் ஓட்டுனரின் இடது புறம் அமர்ந்திருந்தார். வண்டியை மறித்ததும் எதிரிகள் எந்த திசையில் போனார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எதிரிகளில் பெயர், விலாசம் யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டீர்கள் என்றால் எதிரிகளை முன்பாகவே தெரியும். டிராக்டர், டிரைலர் நிறம் ஞாபகத்தில் உள்ளதா என்றால் இல்லை. டிராக்டர் டிரைலரை யார் காவல்நிலையத்திற்கு ஓட்டி வந்தது என்றால் ஆள் வைத்து ஓட்டி வந்தோம், ஓட்டி வந்தவர் பெயர் ஞாபகமில்லை. டிராக்டரில் சாவி இருந்ததா என்றால் ஞாபகமில்லை. மணலை எடை போட்டு பார்த்திற்களா, மதிப்பு தெரியுமா என்றால் சமாராக பார்த்து தெரிந்து கொண்டோம். மேலதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் பொய்யாக சாட்சி அளிக்கீறிற்கள், நீங்கள் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, வழக்கு சொத்துகளை கைபற்றவில்லை, வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது, எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை புள்ளிவிவர கணக்கிற்காக இந்த வழக்கை பதிவு செய்துள்ளீர்கள், பொய் வழக்கு என்பதால் தான் வண்டியின் நிறம் ஞாபகமில்லை, தனிநபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**